## இறுதிச் செபம்:

அதிச உறுப்பினர் ஒருவரை செபம் சொல்ல அழைக்கலாம்.

## முடிவு பாடல்:

### தண்ணொளிப் பரப்பும் வெண்ணிலவே

தண்ணொளிப் பரப்பும் வெண்ணிலவே
என்னுள்ளம் மகிழ எழுந்தருளே
எழுந்தருளே எழுந்தருளே 2

1. உலகினில் ஒளியாய் வந்தவனே
   உருகிடும் மேழுகென தந்தவனே 2
   உலவிடும் இருளினை நீக்கிடவே
   உவந்து அழைத்தேன் வாராயோ

2. தாழ்மனம் என்னுள் விழித்தெழவே
   ஓர் குரல் கொடுத்தேன் ஓடி வந்தாய் 2
   வேறனு நிலையில் வாழ்ந்திடுமென்
   பாழ்மனம் உன்னுள் வாழவைப்பாய்

3. புலன்தரும் இன்பம் பெரிதெனவே
   புலம்பி நான் நின்றேன் பாரினிலே 2
   அழியா இன்பம் நீயெனவே
   அழிந்து நான் கொண்டேன் எழுந்தருளே



INTERNAL CIRCULATION ONLY

*Published by:* Peninsular Malaysia Pastoral Team
api@archkl.org

*Print:* Steno Print Sdn Bhd
*Design:* The Mustard Seed Studio



# அதிசிந்தனை




## அறிமுகம்:

நமது இரக்கமுள்ள தந்நதையிடமிருந்து வாழ்வின் கொடையைப் பெற்றுக் கொண்டோம், வாழ்வளித்தவர்க்கு கிறிஸ்துவின் நன்றி கூறுகின்றோம். நமது வாழ்க்கை பயணத்தில், அடிப்பட்டு குணம் பெற்று, மீண்டும் வாழ்வுக்கு எழும் அனுபவத்தை பெற்றிருக்கிறோம். கடவுளின் கொடைகளான, நமது நேரம், திறன் மற்றும் இதரபல திறமைகளை நாம் பகிர்ந்து கொள்கிறோம். எடுத்து, பிட்டு, கிறிஸ்துவில் கொடு என்பது நம்பிக்கை சீடர்களாக வாழும் நமது வாழ்க்கையைக் குறிக்கும் நிகழ்வுகள். முப்பெரும் கடவுளுக்கு நன்றி தெரிவிக்கும் அன்றாட நிகழ்வுகளாக நமது வாழ்க்கை அமைவதாக! தெய்வீகப் பிரசன்னத்தைப் போற்றிப் புகழ்வது, கிறிஸ்துவிலும் ஒருவர் மற்றவரிடத்திலும் நெருக்கமான உறவு கொள்ள நம்மை அழைக்கிறது.

## தொடக்கச் செபம்:

செபம் சொல்ல அதிக உறுப்பினர் ஒருவரை அழைக்கலாம்

## ஆரம்பப் பாடல்:

### எழுந்தாய் என் உள்ளம்

எழுந்தாய் என் உள்ளம்
அதுவே உன் இல்லம்
பகிர்ந்தாய் உமது உடலை எமக்கு
நன்றியை என்ன சொல்லிடுவோம்
எழுந்தாய் என் உள்ளம்
அதுவே உன் இல்லம்

1. இயற்கையைப் படைத்தாய்
எழிலைக் கொடுத்தாய்
உணர்வன படைத்தாய் உயிர்
கொடுத்தாய் 2
அருவியைப் படைத்தாய்
ஆற்றலைப் படைத்தாய்
உன் சாயலிலே இன்னுயிர் தந்தாய்

2. வருமுன் உரைக்கும் இறைவாக்கினரை
விரும்பும் நேரம் தெரிந்தளித்தாய் 2
ஏற்காது கண்டே ஏங்கிய உள்ளம்
ஏக மகனை புவி வரப் படைத்தாய்

## உரையாடல்:

நம்பிக்கை சீடர்களாக வாழ, கிறிஸ்துவைப் போல் பணியாற்ற முயன்ற மூவரின் வாழ்க்கையைப் பற்றி இங்கு காண்போம்:

1 பெத்தி(Betty) ஒரு முதியோர் இல்லத்தில் வாழ்ந்து வருகிறார். முதுகு மற்றும் முழங்கால் முட்டு வலி காரணமாக கூனி, நொண்டி மெதுவாக நடப்பார்கள். மற்றவர்களை புன்னகையுடன் உபசரிப்பதற்கு நடக்கும் போது தலையை நேராக தூக்கி பார்ப்பார்கள். வலி எல்லாம் பொறுத்துக் கொண்டு, புன்னகையுடன் முகத்தை, எப்படி வைத்துக் கொள்ள முடிகிறது என கேட்ட போது, "வயதாகும் போது வலியை நம்மால் தவிர்க்க இயலாது. ஆனால் நம் மீது அன்பு காட்டிய கிறிஸ்து எத்தனை முறை நமக்காக அவதிப்பட்டார். கிறிஸ்துவைப் பின்பற்ற விரும்புகிறேன் என எனக்கு நானே சொல்லிக் கொள்வேன். திருப்பலிக்குச் செல்லும் போது வலி இருந்தாலும் மகிழ்ச்சியாக இருக்க முயற்சிப்பேன். மற்றவர்களை திட்டுவதை விட, புன்னகை செய்வது மேல்தானே?"

2 சைமனுக்கு மூன்று பெண் பிள்ளைகள். அவரது மனைவி எலிஸ், இல்லத்தரசி. அவர்களின் பிள்ளைகளில் ஒன்று, ஊனமுற்றது. அவளுக்கு நிறைய கவனிப்புத் தேவை. அந்த தம்பதியர்க்கு ஒவ்வொரு நாளும் போராட்டமே. கட்டுமான மேற்பார்வையாளராக வேலை செய்யும் சைமன், வேலைக்குப் பின் குடும்பத்தின் தேவைகளையும் கவனித்துக் கொள்வார். இரவில் உறக்கும் முன் தமது மூன்று பெண் பிள்ளைகளுடன் நேரத்தைக் கழிப்பார். அவர்களுடன் சேர்ந்து அரட்டை அடிப்பார், கதை சொல்வார். பொறுமையை இழக்கும் தருணமும் உண்டு, அந்த சமயத்தில் தமது பிள்ளைகளை ஏசுவார், கண்டிப்பார். தமது ஊனமுற்ற பெண் பிள்ளையுடன் அதிகமான நேரத்தைச் செலவழிப்பதற்கு நமது சொந்த பொழுதுபோக்குகளைக் குறைத்துக் கொள்வார். எலிஸ், அன்றாடும் பொறுப்புடன் தமது கடமைகளைச் செய்து வருவார். தமது பிள்ளைகள் குறிப்பாக ஊனமுற்ற பிள்ளையின் தேவைகளை தாமே கவனித்துக் கொள்ள முயலுவார். மற்ற வேலைகளை வீட்டு வேலைக்காரியிடம் விட்டு விடுவார். ஞாயிற்றுக்கிழமைகளில், அவர்களது குடும்பம் ஆலயத்திற்கு முன்னமே வரும் ஒருசிலரின் அடங்கும். சிரமங்கள், சவால்களுக்கு மத்தியில் குடும்பத்தை ஒன்றாக பேணிகாப்பதற்காக வலிமையை நற்கருணை வழங்குகிறது என சைமனும் எலிஸ்சும் கூறுகின்றனர்.

3 ஜெனிசும் ஜெரியும் சகோதர–சகோதரிகள். ஜெனிஸ் பாலர் பள்ளி ஆசிரியையாக வேலை செய்கிறாள். பெற்றோர்–பிள்ளை உறவை வளர்த்துக் கொள்வதற்கு தமது வகுப்பு மாணவ–மாணவிகளின் பெற்றோர்களை சந்தித்து உரையாடுவாள். இளம் பிள்ளைகள் தங்களது வளரும் காலத்தில் உதவுவதற்கு, கிறிஸ்து கற்றுக் கொடுத்தப் பாதையில் சற்று சிரமம் பாராமல் செல்வது, பயனளிக்கும் என அவள் கருதுகிறாள். ஜெரி கல்லூரி மாணவன். தமது சகோதரியால் தூண்டப்பட்ட அவன், பங்கில் நடைபெறும் பிறர் நலன் விரும்பும் திட்டங்களில் தன்னை ஈடுபடுத்திக் கொள்வான். ஏழை எளியோருடன் சேர்ந்து பணிபுரிவது, அவர்களுக்கு நம்பிக்கை அளிக்கும் சீடனாக இருக்க முடியும் என அவன் கருதுகிறான். அதில் தமது நண்பர்களும் ஈடுபடச் செய்வான். இதனால், ஏழையின் முகத்தில் கிறிஸ்துவைப் பார்க்க உதவுகிறது என அவர் கூறுகிறான். இதன் விளைவால், விவிலியத்தைப் பற்றி இன்னும் அறிந்து கொள்ள அவன் விரும்புகிறான்.

**அருகில் உள்ளவருடன் கலந்து பேசவும். மீண்டும் மற்றவருடன் கலந்து பேசவும்.**

- மேற்குறிப்பிட்ட கதைகளில், எது உங்களைத் தொட்டது?
- இந்த கதை மாந்தர்கள், மற்றவர்களுக்கு 'எடுத்து', 'பிட்டு' மற்றும் கிறிஸ்துவில் 'கொடுக்கிறார்களா' ?
- உங்களின் சொந்த அனுபவத்தின் அடிப்படையில், உங்கள் வாழ்க்கையில் நற்கருணை எந்த அளவுக்கு அருளும் வலிமையும் அளிக்கும் சாதனமாக இருந்திருக்கிறது ?

## இறைவார்த்தை:

### கொலோசையர் 1:9-12

"நாங்கள் இச்செய்தியைக் கேள்விப்பட்ட நாள்முதல் உங்களுக்காகத் தவறாமல் இறைவனிடம் வேண்டி இவ்வாறு அவரிடம் கேட்டுக் கொள்கிறோம்: நீங்கள் முழு ஞானத்தையும் ஆவிக்குரிய அறிவுத்திறமையும் பெற்றுக் கடவுளின் திருவுளத்தைப் பற்றிய அறிவை நிறைவாக அடைய வேண்டும். நீங்கள் அனைத்திலும் ஆண்டவருக்கு உகந்தவற்றைச் செய்து அவருக்கு ஏற்புடையவர்களாய் நடந்து கொள்ள வேண்டும். நீங்கள் பயன் தரும் நற்செயல்கள் அனைத்தும் செய்து கடவுளைப் பற்றிய அறிவில் வளர வேண்டும். நீங்கள் முழு மனஉறுதியோடும் பொறுமையோடும் இருக்குமாறு தம் மாட்சிமிகு ஆற்றலுக்கேற்பத் தம் வல்லமையால் அவர் உங்களுக்கு வலுவூட்ட வேண்டும். மகிழ்ச்சியோடு, தந்தையாம் கடவுளுக்கு நன்றி செலுத்துங்கள். அவர் இறைமக்களுக்கான ஒளிமயமான உரிமைப்பேற்றில் பங்குபெற உங்களைத் தகுதியுள்ளவர்களாக்கியுள்ளார்".

## சிந்தனை:

1. இறைவார்த்தையை மீண்டும் படிக்கவும். பின்னர் நமது உள்ளத்தில் ஆண்டவர் பேசுவதற்கு மௌனம் காப்போம்.
2. நமது உள்ளத்தைத் தொட்ட வார்த்தை/வசனத்தைப் பகிர்ந்து கொள்வோம்.
3. இறைப்பணியில் எவ்வாறு நாம் கடவுளின் சித்தப்படி வளர்ந்து வலுப்பெறுவது?
4. நமது குழுவிற்கு 'வாழ்வளிக்கும் வார்த்தை' ஒன்றை இறைவார்த்தையிலிருந்து தேர்வு செய்யவும்.

## செயல்:

1. மேற்குறிப்பிட்ட சம்பவங்களில் கிறிஸ்துவின் உடலைப் பெற்றுக் கொண்ட அவர்கள், தாங்கள் செல்லும் இடமெல்லாம் கிறிஸ்துவைக் கொண்டு சென்றனர். கீழ் காணும் நிலைகளில் நீங்கள் எவ்வாறு செய்யலாம் என்பதைத் தெரிவிக்கவும்:
தனிநபர் | குடும்பம் | அகிக
உங்கள் சுற்றுவட்டாரத்தில் வாழும் எளியோருக்கு கிறிஸ்து போல் சேவையாற்றுவதற்கு.
2. கடந்த மாதம் முதல் உங்கள் அகிக மேற்கொள்ளும் நடவடிக்கைகளில் நீங்கள் கலந்து கொண்டிருக்கிறீர்களா? அது குறித்துக் கூற விரும்புகிறீர்களா? அவ்வாறு தொடர்ந்து செய்ய விரும்புகிறீர்களா?